1973 நவம்பர் 23]

(இ) ஆம் எனில், எப்போது நீட்டிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) புன்னப் பாக்கம் கிராமத்திற்குச் செல்லும் சாலை, பேருந்துப் போக்கு வரத்துக்கு ஏற்றதாக இல்லை. எனவே 98-ம் எண் வழித்தடத்தை திருப்பி விடுவதோ நீட்டிப்பதோ சாத்தியமில்லை.

எண்ணெய் ஆலைகள் தொடக்கம்.

*357 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர்-கிராம தொழில் வாரிய பிரிவின் மூலம் எண்ணெய் எடுக்கும் ஆலைகளைத் தொடங்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : எண்ணெய் எடுக்கும் ஆலை களைத் துவங்கும் திட்டம் ஏற்கனவே பரிசீலனையில் இருந்து, அதற்கு அறிக்கையும் சமர்ப்பித்தார்கள். ஒருவேளை அது கை விடப்பட்டது என்றால் அவ்வாறு கைவிட்டதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் அரிசித் தவிட்டிலிருந்தும், செக்குப் புண் ணாக்கிலிருந்தும் எண்ணெய் எடுக்கும் திட்டம் மேற்கொள்வதாக இருக்கிறது. அப்படிப்பட்ட திட்டம் நாமக்கல் பகுதியில் முதலா வதாக ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

*358 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அற நிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர்-கிராம வாரியத்தின் மூலமாக எண்ணெய் தயா ரிப்புக்கென மின் விசையில் இயங்கும் செக்குகளை அறிமுகப் படுத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?